வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு




Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 04.03.2026 புதன்கிழமை | இதழ் : 58 | பக்கங்கள் : 08

## பிரதம நீதியரசர் மன்னார் விஜயம்!

கொழும்பு, மார்ச் 04

பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன உத்தியோக பூர்வ பயணமாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னாருக்கு விஜயம் செய்தார்.

மன்னாருக்கு விஜயம் மேற்கொண்ட பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன மன்னார்


07



ஈரானின் ஹார்மோஸ்கான் மாகாணத்தில் உள்ள ஆரம்ப பாட சாலை ஒன்றின் மீது நடந்த குண்டுத் தாக்குதலில் கொல்லப்பட்ட சிறுமிகளின் இறுதிச் சடங்குகள் நடைபெற்றபோது துக்கம் அனுஷ் டிக்கும் பெண்கள். (ஒ)

# மத்திய கிழக்கு மோதல் நிலைக்கு அமைதியான தீர்வை எட்டவேண்டும்

## ஜனாதிபதி அநுர பகிரங்க அழைப்பு



கொழும்பை, மார்ச். 04,

மத்திய கிழக்கில் இடம்பெற்றுவரும் மோதலினால் இலங்கை உட்பட உலக நாடுகள் பல பெரும் பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருப்பதனால், மோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் அமைதியான தீர்வு ஒன்றை எட்டு வதற்கு விரைந்து செயற்படவேண்டும் என்று ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க பாளுமன்றத்தில் பகிரங்க அழைப்பு விடுத்து ள்ளார்.

நேற்று நடைபெற்ற பாராளுமன்ற கூட்டத்தின்போது, மத்திய கிழக்குப் போர்ச் சூழலும், இலங்கையில் இடர்கால நிலமையும் தொடர்பில் ஜனாதிபதி விசேட உரையாற்றினார். அவ்வுரையின் போதே ஜனாதிபதி மேற்சொன்னவாறு பகிரங்க அழைப்பு விடுத் தார்.

ஜனாதிபதி தனது உரையில், மத்திய கிழக்கில் மோதல்கள் நடந்து கொண்டிருந்தாலும், இலங்கையில் இப்போதைக்கு எரி பொருள் தட்டுப்பாடு ஏற்படாது என்று உறுதியளித்த துடன், தற் போதைய சூழ்நிலையில் எரிபொருள் இருப்பு மற்றும் தொடர்ச்சியான விநியோகத்தை உறுதி

07

# பயங்கரவாத தடைச் சட்டத்தை இலங்கை அரசு நீக்கவேண்டும்!

## ஐ.நா. மனித உரிமைகள் சபையில் வலியுறுத்தல்

ஜெனீவா, மார்ச் 04

இலங்கையில் நடைமுறையி லுள்ள பயங்கரவாதத் தடைச்சட்ட த்தை நீக்கவேண்டும் அல்லது அத னைப் பயன்படுத்துவதைத் தவிர்க்கவேண்டும் என்ற கோரிக் கையை ஐக்கிய நாடுகள் மனித உரி மைகள் பேரவையில் இலங்கை தொடர்பான முக்கிய குழு மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஜெனீவாவில் நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 61ஆவது கூட்டத்தொடரில், இலங்கை தொடர்பான முக்கிய குழு

07

## ஈரான் மீது நடக்கும் தாக்குதல் ஐ.நா. சாசனத்தை மீறும் செயல்

### சஜித் சபையில் கண்டனம்

கொழும்பு, மார்ச் 04

ஈரான் மீதான தாக்குதலானது ஐ.நா. சாசனத்தை மீறும் செயலாகும். அதனை வன்மையாகக் கண்டிக்கின் றோம் என்று எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அதேபோல ஐக்கிய அரபு அமீரகம், சவூதி, கட்டார் உள்ளிட்ட நாடுகள் மீது ஈரான்

07

## பரிசுத்த பாப்பரசரை இலங்கை வருமாறு ஜனாதிபதி அழைப்பு



கொழும்பு, மார்ச் 04

இலங்கைக்கு வருகை தருமாறு திருத்தந்தை 14 ஆம் லியோவுக்கு ஜனாதிபதி அநுர குமார

07

## மக்கள் வரிசையில் காத்திருக்க பிரார்த்திக்கின்றது எதிர்க்கட்சி!

### பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க

கொழும்பு, மார்ச் 04

நாங்கள் ஆட்சிக்கு வந்த நாள் முதல் நாடு வங்குரோத்து நிலையை அடையவேண்டும் என்றும், மக்கள் மீண்டும் நீண்ட வரிசைகளில் காத்திருக்கவேண்டும் என்றும் எதிர் க்கட்சியினர் பிரார்த்தித்து வருவதாக கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி பிரதி அமைச்சர் சதுரங்க அபேசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

07

## நிறைவேற்று ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கு சரிபாதியினரே ஆதரவு

### புதிய ஆய்வு ஒன்றில் தகவல்

கொழும்பு, மார்ச் 04

இலங்கையில் நடைமுறையிலுள்ள நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ரத்து செய்வது தொடர்பில் நாட்டின் மக்கள் தொகையினர் சரிபாதி யாகப் பிரிந்துள்ளதாக றிசேர்ச் லங்கா மேற்கொண்ட புதிய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

குறித்த ஆய்வின்படி, 50 வீதத்தினர் இந்த முறைமை இரத்து செய்யப்பட வேண்டும் எனக் கருதுகின்ற அதேவேளை, எஞ்சிய 50 வீதத்தினர் அது தொடர்ந்து நீடிக்க வேண்டும் என விரும்புகின்றனர்.

நாட்டில் புதிய அரசியலமைப்பின் தேவை இருப் பதாக 60 வீத மக்கள் நம்புகின்றபோதிலும், தற்போதைய அரசாங்கம் அதனை அறிமுகப்படுத்தும் என்று 20 வீதமானோர் மட்டுமே கருதுகின்றனர்.

மாறாக, சுமார் 80 வீத மக்கள் அரசாங்கம் புதிய அரசியலமைப்பைக் கொண்டுவராது என்றே நம்பி க்கை வெளியிட்டுள்ளனர்.

மேலும், புதிய அரசியலமைப்பானது நாட்டின் ஜனநாயகத்தை வலுப்படுத்தும் என்று 45.5 வீத மக்கள் கருதுகின்றனர்.

ஒருவேளை தற்போதைய அரசாங்கம் புதிய அரசி யலமைப்பைக் கொண்டுவரத் தவறினால், நாடு ஒரு போதும் புதியதொரு அரசியலமைப்பைக் காணப் போவதில்லை என 50 வீத

07

## சீரான முறையில் நேற்று எரிபொருள் விநியோகம்

கொழும்பு, மார்ச் 04

எரிபொருள் விநியோகம் நேற்று முதல் சீரான முறை யில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று காலை ஆறு மணி முதல் எரிபொ ருள் விநியோகம் தொடங்கப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாகப் பணிப்பா ளர் மயூர நெத்திகுமாரகே தெரிவித்துள்ளார்.

ஊடகங்களுக்கு நேற்று கருத்து வெளியிட்ட அவர்-

07

## மத்திய கிழக்கு போர்ச் சூழல் எதிர்க்கட்சிகள் கூடி ஆராய்வு

கொழும்பு, மார்ச் 04

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவி வரும் போர்ச் சூழலினால் இலங்கைக்கு ஏற்படக்கூடிய தாக்கங்கள் குறித்து ஆராய்வதற்காக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் விசேட கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றது.

பாராளுமன்றத்திலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலு வலகத்தில் நேற்று காலை இடம்பெற்ற இக்கூட்டத்தில், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சித் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் கள் பலரும் கலந்துகொண்டனர்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக் கடற்படை கச்சதீவில் தமிழக இளைஞர்களை தாக்கியது!

## தமிழகத்தில் இருந்து குற்றச்சாட்டு

சென்னை, மார்ச் 04

கச்சதீவு திருவிழாவின்போது இலங்கை கடற்படை அதிகாரி ஒருவர் தமிழக பக்தர்களை தாக்கினார் எனவும் இதன்போது தமிழக இளைஞர்கள் தரையில் இருந்து "இந்த பிரச்னைகளுக்கு தீர்வு வேண்டும், குறித்த கடற்படை அதிகாரியை தண்டிக்க வேண்டும்" என எதிர்ப்பு தெரிவிக்க ஆரம்பித்தனர் எனவும் அதன் பின்னர் கடற்படை உயர் அதிகாரி ஒருவர் வந்து மக்களை சமாதானம் செய்ததாக தமிழக, கச்சதீவு பாரம்பரிய திருப்பயணக் குழு ஒருங்கிணைப்பாளர் சே.நல்லதம்பி தெரிவித்துள்ளார்.

கச்சதீவு திருவிழா குறித்து அவர் கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனை கூறினார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாங்கள் ஆரம்பத்தில் கச்சதீவுக்குள் உள்நுளையும்போது அங்கிருந்த கடற்படை மற்றும் பொலிஸார் வரம்பு மீறி செய்யப்பட்டனர். கடுமையான வார்த்தைகளை பயன்படுத்தினார்கள்.

இதன்போது எனக்கும் அவர்களுக்கும் இடையே மோதல் ஏற்படக்கூடிய சூழ்நிலைகூட ஏற்பட்டது.

இதன்போது இந்திய தூதரகத்துடன் நான் பேச முயற்சித்தாலும் பின்னர் அங்கிருந்த சூழ்நிலையையும், ஏனையோரது நிலையையும் கருத்தில் கொண்டு சமாளித்துக் கொண்டு உள்ளே சென்றோம்.

திரும்பி வரும்போதும் அதே மாதிரியான சூழ்நிலையே



ஏற்பட்டது.

அங்கிருந்த சிறு வயதுடைய கடற்படை அதிகாரி ஒருவர் தமிழக இளைஞர்களுடன் மோதலில் ஈடுபடுவது போன்ற நிலையை கடைப்பிடித்தார்.

பலர் மயக்கமுறுகின்றார்கள், மூச்சு திணறல் ஏற்படுகின்றது. எனவே மக்களை சிறிது நேரம் கடற்கரையில் பரவலாக அமர்ந்திருப்பதற்கு அனுமதிக்குமாறு இளைஞர்கள் கடற்படையிடம் கோரியவேளை இந்த முரண்பாடு ஏற்பட்டது.

இதன்போது சிறிய கடற்படை அதிகாரி ஒருவர் இளைஞர்களை தாக்கினார்.

பின்னர் இளைஞர்கள் எதிர்ப்பு வெளியிட்ட நிலையில் அங்கு வந்த கடற்படை உயர் அதிகாரி ஒருவர் நிலைமையை சமாளித்து மக்களை கடற்கரையில் உட்கார அனுமதித்தார்.

கச்சதீவு திருவிழாவானது வருடா வருடம் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. இருப்பினும் சில குளறுபடிகள் அதில் இருக்கத்தான் செய்கின்றன.

இந்திய பக்தர்கள் உள்நுழையும்போது அங்கே நான்கு வழிகளே காணப்படுகின்றன. அங்கே பெருமளவான கூட்டம் வரும்போது அதனை சமாளிக்கக்கூடிய நிலைமை காணப்படவில்லை.

திருவிழா முடிந்து திரும்பும் போதும் பிரச்னை ஏற்பட்டது.

திருவிழாவிற்கு வந்த அதிகாரிகள், விருந்தினர்கள் என அனைவரும் செல்லும்வரை மக்கள் அங்கே ஓரிடத்தில் மறித்து வைக்கப்படுகின்றனர்.

அவர்கள் கடற்படையினர் மற்றும் பாதுகாப்புப் பிரிவினரின் கப்பல்களில் திரும்பிச் செல்கின்றனர்.

ஆகையால் அவர்களின் பாதுகாப்பு கருதியே மக்கள் இவ்வாறு மறித்து வைக்கப்படுகின்றனர்.

இதனால் 10 தொடக்கம் 12 மணிவரை மக்கள் கடுமையான வெயிலில் நிற்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது.

12 ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஒரே இடத்தில் மணிக்கணக்காக இருக்கும்போது அங்கு காற்று வசதியும் இல்லாத காரணத்தினால் மூச்சுத் திணறல் ஏற்பட்டது.

இந்திய மக்களுக்கும் இலங்கை மக்களுக்கும் தனித்தனியாக வழியை பிரித்து விட்டால் அவர்கள் அவர்களது பாதையில் இலகுவாக செல்வார்கள்.

இந்த விடயத்தில் இந்திய அரசும் இலங்கையின் வெளியுறவுத் துறையும் கரிசினை செலுத்தி, அடுத்த ஆண்டு இதே பிரச்சினை நடக்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# அஸ்வெசும நலன்புரித் திட்டத்தை முழு மீளாய்வு செய்ய நடவடிக்கை

கொழும்பு, மார்ச். 04

அஸ்வெசும நலத்திட்டத்தின் கீழ் நன்மைகளை வழங்குவதில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு, முழுமையான மீளாய்வு ஒன்றை முன்னெடுக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

தற்போது அமுலிலுள்ள மேன்முறையீட்டு பொறிமுறைகள் மாத்திரம் தகுதியானவர்களைக் கண்டறிய போதுமானதாக இல்லை என கிராமிய அபிவிருத்தி மற்றும் சமூக பாதுகாப்பு பிரதி அமைச்சர் வசந்த பியதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

தகுதியற்றவர்கள் உள்வாங்கப்பட்டுள்ளமை மற்றும் மிக வறிய குடும்பங்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளமை போன்ற புகார்கள் அதிகரித்து வரும் நிலையில், நலன்புரி நன்மைகள் சபையூடாக இந்த விரிவான மதிப்பீடு விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அஸ்வெசும கொடுப்பனவுகளைப் பெறும் சிலர், அதனை வாழ்வாதாரத்தை மேம்படுத்தப் பயன்படுத்தாமல் மதுபானம் மற்றும் அத்தியாவசியமற்ற நுகர்வுப் பொருட்களுக்காகச் செலவிடுவதாக எழுந்துள்ள விமர்சனங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்படவுள்ளது. (அ)

மத்திய கிழக்கு பதற்ற நிலை;

# இலங்கை வரும் கப்பல்களின் போக்குவரத்தில் பாதிப்பில்லை

கொழும்பு, மார்ச் 04

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் பதற்றமான சூழலுக்கு மத்தியிலும், இலங்கைக்கு வருகை தரும் கப்பல்களின் போக்குவரத்தில் இதுவரை எவ்வித பாதிப்புகளும் ஏற்படவில்லை என துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அநுர கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காகப் பல கப்பல்கள் கோரிக்கை விடுத்துள்ளதாகவும், அவற்றுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இருப்பினும், வளைகுடா பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாக அங்குள்ள சில நாடுகளுக்கான கடல்சார் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதை அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் விளைவாக, மத்திய கிழக்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவுள்ள தேயிலை உள்ளிட்ட ஏனைய பொருட்களை மறு அறிவித்தல் வரும் வரை துறைமுகங்களுக்குக் கொண்டு வர வேண்டாம் என அவர் ஏற்றுமதியாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)

# மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் விரைவில் முடிவுக்கு வரவேண்டும்

## மகிந்த ராஜபக்ஷ வலியுறுத்து

கொழும்பு, மார்ச் 04

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் முடிந்தவரை விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஹோமாகம வரலாற்றுச் சிறப்புமிக்க இம்புலகந்த சிறீ சம்புத்தி விகாரையில் வழிபாடுகளில் ஈடுபட்டதன் பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்தை எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் முடிக்க வேண்டும். ஏனைய வல்லரசு நாடுகள் இதில் தலையிட்டு தீர்வு காணவேண்டும் என்பதே எனது எதிர்பார்ப்பாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன்போது, கைது செய்யப்பட்டுள்ள அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர், ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் சுரேஷ் சலே தொடர்பிலும் மகிந்த தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

அவர் கைது செய்யப்பட்டமைக்கான காரணம் இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஏதேனும் காரணத்துடன் கைது செய்யப்பட்டிருந்தால் அது தொடர்பில் நீதிமன்றம் தீர்மானிக்கும். அரசியல் பழிவாங்கலுக்காகவும் அவர் கைது செய்யப்பட்டிருக்கலாம் எனவும் முன்னாள் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

டித்வா புயலால் பாதிக்கப்பட்டோர்

# சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் தரவுகளை நிராகரிக்கின்றது அரசு

கொழும்பு, மார்ச் 04

டித்வா அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் தங்கியுள்ள தற்காலிக நிவாரண முகாம்களில் உள்ளவர்களின் எண்ணிக்கை தொடர்பாக, சர்வதேச இடம்பெயர்வுக்கான அமைப்பு மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் வெளியிட்டுள்ள தரவுகளை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் நிராகரித்துள்ளது.

மாவட்ட செயலகங்கள் ஊடாகத் திரட்டப்பட்ட உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின்படி, தற்போது 32 பாதுகாப்பு மையங்களில் 3,146 நபர்கள் மட்டுமே தங்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் ஊடகப் பேச்சாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

மத்திய நிலையத்தின் தரவுகளின்படி, பதுளை மாவட்டத்தில் 16 மையங்களும், நுவரெலியா மற்றும் கேகாலை மாவட்டங்களில் தலா 7 மையங்களும், கொழும்பில் 2 மையங்களும் இயங்கி வருகின்றன.

ஏனைய மாவட்டங்களில் இவ்வாறான மையங்கள் எவையும் தற்போது செயல்பாட்டில் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், முகாம்களில் உள்ளவர்களுக்குத் தேவையான அனைத்து அத்தியாவசிய வசதிகளும் தங்குதடையின்றி வழங்கப்பட்டு வருவதாகவும், நிரந்தர மீள்குடியேற்றம் வரை அவர்கள் முறையாகப் பராமரிக்கப்படுவார்கள் என்றும் அவர் உறுதிப்படத் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், சர்வதேச அமைப்புகளின் அறிக்கையில் 45 முகாம்களில் 4,729 பேர் தங்கியிருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளதோடு, மாத்தளை மற்றும் கண்டி மாவட்டங்களிலும் முகாம்கள் உள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. (அ)

# தன்னாட்சி அதிகாரம் கொண்ட பிராந்தியங்கள் தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வாக அமையும்!

## முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச் 04

தேசிய இனப்பிரச்னைக்குத் தீர்வாக தன்னாட்சி அதிகாரங்களைக் கொண்ட பிராந்தியங்கள் மற்றும் இரு அவைகளைக் கொண்ட பாராளுமன்ற முறைமை உருவாக்கப்படவேண்டும் என முன்னிலை சோசலிசக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பு சுகததாச உள்ளரங்கில் நடைபெற்ற கட்சியின் நான்காவது மாநாட்டில் உரையாற்றிய அதன் பிரசாரச் செயலாளர் துமிந்த நாகமுவ, மலையகத் தமிழர்களை இலங்கையர்களாக உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்க வேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார்.

ஏதேனும் ஒரு குறிப்பிட்ட சமூகத்தை இலக்கு வைத்து சட்டங்கள் இயற்றப்படுவதைத் தடுக்கவே இரு அவைகளைக் கொண்ட பாராளுமன்றத்தை தாம் முன்மொழிவதாக அவர் தெரிவித்தார்.

தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்து வரும் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம், மக்களின் ஜனநாயக உரிமைகளை நசுக்கும் முயற்சி எனச் சாடிய துமிந்த நாகமுவ, ஐக்கிய மக்கள் சக்தியும் தேசிய மக்கள் சக்தியும் ஒரே மாதிரியான நவதாராளவாதக் கொள்கைகளையே பின்பற்றுவதாகக் குற்றஞ்சாட்டினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
04.03.2026 புதன்கிழமை
விசுவாவசு வருடம், மாசி 20

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
– யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

## சர்வதேச காடைத்தனம்

கடந்த வருடம் ஜூன் மாதத்தில் ஈரான் மீது முதலில் இஸ்ரேலும் பிறகு அமெரிக்காவும் குண்டுவீச்சுக்களை நடத்தியபோது அந்த நாட்டின் அதியுயர் ஆன்மீகத் தலைவர் அயத்தொல்லா அலி காமெனியை தற்போதைக்கு கொலை செய்யும் நோக்கம் தங்களுக்கு இல்லை என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கூறியிருந்தார். இப்போது எட்டு மாதங்கள் கழித்து கடந்த சனிக்கிழமை காலை தலைநகர் தெஹ்ரானில் மேற்கொள்ளப்பட்ட குண்டுவீச்சு தாக்குதலில் ஈரானிய தலைவரும் அவருடன் சேர்த்து பாதுகாப்பு அமைச்சர் மற்றும் முக்கியமான படைத்தளபதிகளும் கொலை செய்யப்பட்டு விட்டார்கள்.

ட்ரம்பை பொறுத்தவரை, ஈரானிய தலைவரை கொலை செய்வதற்கான தருணம் என்று கடந்த சனிக்கிழமையைத் தான் தீர்மானித்தார் போலும். ஒரு நாட்டின் தலைவரை கொலை செய்வது குறித்து இன்னொரு நாட்டின் தலைவர் தனது மனம்போன போக்கில் பேசியதை உலகின் முக்கியமான எந்தவொரு நாடுமே அன்று பகிரங்கமாக கண்டிக்கவில்லை.

இந்த வருடம் ஜனவரியில் தென்னமெரிக்க நாடான வெனிசூலாவின் தலைநகரில் இருந்து ஜனாதிபதி நிக்கலஸ் மதுரோவையும் அவரது மனைவியையும் அமெரிக்கப் படைகள் நியூயோர்க்கிற்கு கடத்திக்கொண்டு சென்றன. தனது முதலாவது பதவிக் காலத்தில். வெளிநாட்டு மோதல்களுக்கு எந்தவொரு அமெரிக்கப்படை வீரனையும் அனுப்பியதில்லை என்று பெருமை பேசிய ட்ரம்ப் தனது இரண்டாவது பதவிக்காலத்தில் ஐரோப்பா உட்பட உலகின் பல பிராந்தியங்களிலும் ஆக்கிரமிப்புக்களைச் செய்வதில் முனைப்பைக் காட்டி உலகில் பெரும் கொந்தளிப்பான நிலைவரத்தை தோற்றுவித்திருக்கிறார்.

ஈரான் அணுவாயுதங்களை தயாரிக்கும் முயற்சிகளில் இறங்கியிருப்பதாகவும் அதை தடுப்பதற்காகவே அந்த நாட்டின் மீது தாக்குதல்களை நடத்துவதாகவும் ட்ரம்ப் கூறினார். ஆனால், பிறகு ஆட்சி மாற்றம் பற்றி பேசிய அவர் தற்போது ஈரானிய அதியுயர் ஆன்மீகத் தலைவரை கொலைசெய்துவிட்டு சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்ளுமாறு ஈரானிய மக்களுக்கு கூறுவதைக் காண்கிறோம்.

எட்டு மாதங்களுக்கு முன்னர் குண்டுத் தாக்குதல்களை நடத்திவிட்டு ட்ரம்ப் ஈரானின் அணுவசதி கட்டமைப்புக்கு சகலதும் நிர்மூலம் செய்யப்பட்டு விட்டதாகவும் இனிமேல் அந்த நாடு எந்தவிதமான அணு நடவடிக்கையிலும் ஈடுபட முடியாது என்றும் மார்தட்டினார். ஒரிரு தடவைகள் அல்ல பல தடவைகள் அவர் அவ்வாறு கூறினார்.

அவர் அன்று கூறியது உண்மையானால், இப்போது இஸ்ரேலுடன் சேர்ந்து இப்போது எதற்காக அமெரிக்கா ஈரானைத் தாக்குகிறது? இப்போது எந்த அணுவசதியையும் ஈரான் கொண்டிருக்கக் கூடாது என்று ட்ரம்ப் கூறுகிறார். அவர் கடந்த வருடம் ஜூனில் கூறியது பொய்யா அல்லது இப்போது கூறுவது பொய்யா?

நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு அமெரிக்கா போலியான காரணங்களைக் கூறுவது ஒன்றும் புதிய விடயமல்ல. சதாம் /ஹசெய்ன் பேரழிவு தரும் ஆயுதங்களை குவித்து வைத்திருப்பதாக கூறிக் கொண்டு 20003 ஆம் ஆண்டில் பிரிட்டனுடன் சேர்ந்து ஈராக்கை ஆக்கிரமித்த அமெரிக்கா இறுதியில் பேரழிவு தருபவை என்று கூறக்கூடிய ஒரு ஆயுதத்தைத் தானும் கண்டுபிடிக்கவில்லை. இறுதியில் அமெரிக்க ஆக்கிரமிப்பு ஈராக்கை மாத்திரமல்ல, முழு மத்திய கிழக்கினதும் உறுதிப்பாட்டையும் குலைத்தது.

மீண்டும் தற்போது ஈரான் மீது தாக்குதல்களை தொடர்ந்து கொண்டிருக்கும் அமெரிக்கா அதன் முன்னைய அனுபவங்கள் காரணமாக தரையில் படைகளை இறக்குவதற்கு தயங்கும் என்று சர்வதேச அவதானிகள் கருதுகிறார்கள். ஆனால், எந்த நேரத்தில் எவ்வாறு நடந்துகொள்வார் என்று சொல்லமுடியாத பேர்வழியான ட்ரம்ப் விளைவுகளைப் பற்றி யோசிக்காமல் எந்த முடிவையும் எடுக்கக் கூடும்.

ட்ரம்ப் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதான்யாகுவுடன் சேர்ந்து செய்யும் இந்த சர்வதேச காடைத்தனத்தை மத்திய கிழக்கு நாடுகள் ஐக்கியப்பட்டு எதிர்க்காவிட்டால், அந்த பிராந்தியத்தின் புவிசார் அரசியல் நிலைவரத்தை கட்டுப்படுத்தும் சக்தியாக சியோனிச நாடான இஸ்ரேல் வெளிக்கிளம்பக் கூடிய பேராபத்து இருக்கிறது.

# “வடக்கின் போர்” நாளை ஆரம்பம்

*யாழ்ப்பாணம், மார்ச். 04*

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மற்றும் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரி ஆகியவற்றுக்கு இடையிலான “வடக்கின் போர்” என்றழைக்கப்படும் மாபெரும் துடுப்பாட்டப் போட்டி நாளை 5ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இந்தத் துடுப்பாட்ட போட்டி 119ஆவது முறையாக நடத்தப்படவுள்ளது.

119ஆவது போட்டியானது 2026 மார்ச் 5, 6 மற்றும் 7ஆந் திகதிகளில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து, 50 ஓவர்கள் போட்டி வரும் 14ஆம் திகதியன்று புனித பரியோவான் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட முதலாவது வடக்கின் போர் 1904 ஆம் ஆண்டில் நடைபெற்றது. இதுவரை இடம்பெற்ற 118 போட்டிகளில், புனித பரியோவான் கல்லூரி 40 போட்டிகளிலும், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 29 போட்டிகளிலும் வெற்றி பெற்றன. அத்துடன், 41 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி நிறைடைந்தன. மேலும், 07 போட்டிகளுக்கான முடிவுகள் கிடைக்கப் பெறவில்லை என்பதுடன் ஒரு போட்டி இடையில் கைவிடப்பட்டது.

(எ-05)

# பிரச்னைகளுக்கு சுமூக தீர்வுகாண அதிகாரிகள் ஒத்துழைக்கவில்லை

## அமைச்சர் சந்திரசேகர் கவலை

*யாழ்ப்பாணம், மார்ச். 04*

தீர்க்கப்படக் கூடிய வகையில் பல பிரச்னைகள் உள்ள நிலையில் திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்பு உரிய வகையில் கிடைக்கவில்லை என்று அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“எமது மாகாணத்தின் சுற்றாடல் பிரச்னை முக்கியத்துவமானது. தீர்க்கப்படாத பல பிரச்னைகள் உள்ளன.

சுற்றாடல் அமைச்சின் கீழான வனவளத் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் மற்றும் கரையோரம் பேணல் திணைக்களம் ஆகியவற்றின் செயல்பாடுகள் தொடர்பில் மக்களிடத்தில் அதிருப்தி நிலவுகிறது. தீர்க்கப்பட கூடிய வகையில் பல பிரச்னைகள் உள்ள நிலையில் திணைகள அதிகாரிகளின் ஒத்துழைப்பு உரிய வகையில் இல்லை. இங்குவரும் முதலீட்டாளர்கள் தமக்கான அனுமதியைப் பெற்றுக்கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. ஒரு முதலீட்டாளர்களுக்கான அனுமதிகள் தொடர்பில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். எந்த பிரதேசத்தில் முதலீடு செய்யவிரும்புகிறார்களோ அப்பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் இது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தி முதலீட்டாளர்களுக்கான ஒருங்கிணைப்பினை மேற்கொள்ள வேண்டும்.” - என்றார். (எ)

# வனவளம், வன ஜீவராசிகள் திணைக்கள காணிகள் பற்றி கவனம் எடுக்க வேண்டும்

## வடக்கு மாகாண ஆளுநர் வலியுறுத்தல்

*யாழ்ப்பாணம், மார்ச். 04*

வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் காணிகள் தொடர்பில் கவனம் எடுக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“வடக்கு மாகாணத்தை நோக்கி பல முதலீட்டாளர்கள் வருகை தருகின்றனர். அவர்களுக்கான முதலீட்டு அனுமதிகளைப் பெற்றுக் கொள்வதில் காலதாமதம் ஏற்படுகிறது. சுற்றாடல் அமைச்சின் கீழான நிறுவனங்கள் ஏற்படுத்தும் தாமதங்கள் மற்றும் தடைகள் இயலுமானவரை நிவர்த்தி செய்யப்பட வேண்டும்.

மேலும், சுற்றாடல் அமைச்சின் கீழான வனவளத் திணைக்களம் மற்றும் வன ஜீவராசிகள் திணைக்களத்தின் காணிகள் தொடர்பாகவும் கவனம் எடுக்க வேண்டும்.

எமக்கு அபிவிருத்தி அவசியம். சுற்றாடல் சார்ந்த அபிவிருத்தியே தேவை. தன்னார்வலர்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் மர நடுகைத் திட்டங்களை இங்கு சிறப்பாக முன்னெடுத்து வருகின்றனர்.” - என்றார்.

(எ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளின் உயர்கல்வி உத்யோகம் குறித்து யோசிப்பீர்கள். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களை கவர சலுகைகளை அறிவிப்பீர்கள். நனவாகும் நாள்.

**இடபம்**
எதிர்பார்த்தவை சில தள்ளிப்போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். மறுக்கப்பட்ட விஷயங்கள் இன்று முடியும். தேவைகள் பூர்த்தியாகும்.

**மிதுனம்**
தைரியமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். வியாபாரத்தில் போட்டிகளை எதிர்கொண்டு வெற்றி காண்பீர்கள். அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். தைரியம் கூடும் நாள்.

**கடகம்**
இதுவரை இருந்த டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். வியாபாரத்தில் புதிய சரக்குகள் கொள்முதல் செய்வீர்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். உற்சாகமான நாள்.

**சிம்மம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் வேலைச்சுமை இருந்துக் கொண்டேயிருப்பதாக ஆதங்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் கூடுதல் கவனம் செலுத்துவது நல்லது. நாவடக்கம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
எடுத்த வேலையை முடிப்பதற்குள் அலைச்சல் அதிகரிக்கும். வாகனத்தில் கவனம் தேவை. வியாபாரத்தில் போட்டிகளையும் தாண்டி ஓரளவு லாபம் வரும். பணிகளை போராடி முடிப்பீர்கள்.

**துலாம்**
எதிர்பார்ப்புகள் நிறைவேறும். பெற்றோர்கள் பக்கபலமாக இருப்பார்கள். வெளிவட்டாரத்தில் அந்தஸ்து உயரும். பிரியமானவர்களுக்காக சிலவற்றை விட்டுக் கொடுப்பீர்கள். நினைத்ததை முடிக்கும் நாள்.

**விருச்சிகம்**
அனுபவபூர்வமாகவும் அறிவுப்பூர்வமாகப் பேசி எல்லோரையும் கவர்வீர்கள். வியாபாரத்தில் வேலையாட்களை தட்டிக் கொடுத்து வேலை வாங்குவீர்கள். அலுவலகத்தில் மரியாதைக் கூடும்.

**தனுசு**
கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் கணிசமாக உயரும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். புதிய மாற்றம் ஏற்படும் நாள்.

**மகரம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் மற்றவர்களை நம்பி முக்கிய முடிவுகள் எடுக்க வேண்டாம். தர்மசங்கடமான சூழ்நிலைகளில் அவ்வப்போது சிக்கித் தவிப்பீர்கள். எச்சரிக்கை தேவைப்படும் நாள்.

**கும்பம்**
உங்களின் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். மனைவி வழியில் நல்லசெய்தி உண்டு. தாயாரின் உடல் நிலை சீராகும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். மகிழ்ச்சியான நாள்.

**மீனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்பு கூடும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைகட்டும். வியாபாரத்தில் புகழ் பெற்ற நிறுவனத்துடன் புது ஒப்பந்தம் செய்வீர்கள். வெற்றி பெறும் நாள்.

# எரிபொருள் தொடர்ந்து கிடைக்கும்: அச்சம் கொள்ளத் தேவையில்லை!

## ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

வவுனியா, மார்ச். 04

எரிபொருள் தொடர்ந்து கிடைக்கும். மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ம. ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஈரான் மற்றும் இஸ்ரேல் நாடுகளுக்கு இடையிலான யுத்தம் காரணமாக இலங்கையில் மக்கள் தமது நேரங்களை வீண் விரயம் செய்து நீண்ட வரிசையில் நின்று எரிபொருளை கொள்வனவு செய்கின்றனர்.

அரசாங்கம் மக்களுக்கு எரிபொருளை தடையின்றி வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. தற்போது 35 நாட்களுக்கு தேவையான டீசல், 37 நாட்களுக்கு தேவையான பெற்றோல், 30 நாட்களுக்கு தேவையான சுப்பர் பெற்றோல், 72 நாட்களுக்குத் தேவையான சுப்பர் டீசல் என்பன கையிருப்பில் உள்ளன.

தொடர்ச்சியாக எரிபொருள் கப்பல்கள் வருவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, மக்கள் வீணாக பீதி அடைய வேண்டாம் என பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் கேட்டுக் கொள்கின்றோம்."- என்றார். (எ-10)

# முதலீட்டாளர்களுக்கான அனுமதிகளை விரைவாக வழங்க அரசு நடவடிக்கை

## யாழில் சுற்றாடல் அமைச்சர் தெரிவிப்பு



யாழ்ப்பாணம், மார்ச். 04

முதலீட்டாளர்களுக்கான அனுமதிகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் தம்மிக்க பட்டபெந்தி தெரிவித்தார்.

தேசிய சுற்றாடல் சட்ட திருத்தம் தொடர்பில் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான தெளிவுபடுத்தல் மற்றும் கருத்தாய்வு சுற்றாடல் அமைச்சர் தலைமையில், கடற்றொழில் நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் ஆகியோரின் பங்குபற்றுதலுடன் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்போது, உரையாற்றிய அமைச்சர் மேலும் கூறுகையில்,

"யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு முதல் தடவையாக வருகை தந்துள்ளேன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நிலவும் காணிப் பிரச்னைகளுக்கு நிரந்தர தீர்வு காண்பதற்காக, கடந்த ஒகஸ்ட் மாதம் விசேட அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டது. இந்த உபகுழு தற்போது மாவட்ட ரீதியாக தரவுகளை சேகரித்து வருவதுடன், எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் இது தொடர்பான எனது இறுதி அறிக்கையை சமர்ப்பிக்கவுள்ளேன்.

மேலும், எமது அமைச்சின் கீழான நிறுவனங்களில் நிலவும் ஆளணி வெற்றிடங்கள் காரணமாகவே முதலீட்டாளர்களுக்கான அனுமதிகளை வழங்குவதில் காலதாமதங்கள் ஏற்பட்டுள்ளன. தற்போது இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்காக 1,685 புதிய உத்தியோகத்தர்களை இணைத்துக்கொள்வதற்கான அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. இந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கைகளில் இப் பிரதேசத்தை சேர்ந்தவர்களையும் அதிகளவில் விண்ணப்பிக்க ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

எதிர்காலத்தில் அனுமதிகள் வழங்குவதில் ஏற்படும் தாமதங்கள் முற்றாக சீராகும். கடந்த காலங்களில் எமது அமைச்சின் கீழான நிறுவனங்களில் பணியாற்றும் அதிகாரிகள் சரியான முறையில் வழிநடத்தப்படவில்லை என்ற குறைபாட்டை அவதானிக்க முடிந்தது."- என்றார். (எ)

# வடமராட்சி கிழக்கில் போதை ஒழிப்பு அடையாள ஸ்ரிக்கர் ஒட்டும் திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச். 04

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விழிப்புணர்வு வழங்கப்பட்டு போதைப்பொருளுக்கு எதிரான ஸ்ரிக்கர்கள் வாகனங்களில் நேற்று முன்தினம் ஒட்டப்பட்டன.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவின் போதை ஒழிப்புக்கான "முழு நாடுமே ஒன்றாக" தேசிய செயல்பாட்டுக்கு அமைவாக போதை ஒழிப்பு அடையாள ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்திட்டம் நேற்று முன்தினம் மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் நடைபெற்றன.

மருதங்கேணி பொலிஸ் நிலைய தலைமை பொறுப்பதிகாரி தெலும் பண்டார தலைமையில் இந்த ஸ்ரிக்கர் ஒட்டும் செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, மருதங்கேணி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நூற்றுக்கணக்கான வாகனங்களுக்கு ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டன.(எ-08)

# நாட்டில் சீரான வானிலை

கொழும்பு, மார்ச். 04

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் சீரான வானிலை நிலவக்கூடும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய , சப்ரகமுவ, மேல், தென் மற்றும் வடமத்திய மாவட்டங்களின் சில இடங்களிலும் அத்துடன் வவுனியா மாவட்டத்திலும் அதிகாலை வேளையில் பனிமூட்டம் காணப்படும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்களிலும் சீரான வானிலை காணப்படும்.

கடல் பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 20 - 30 கிலோ மீற்றர் வேகத்தில் மாறுபட்ட திசைகளில் இருந்து காற்று வீசும்.

நாட்டைச் சூழ உள்ள கடல் பிராந்தியங்கள் மிதமான அலையுடன் காணப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மாகாண சபைத் தேர்தலுக்கான அழுத்தங்களை பிரயோகிக்கவும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தல்

கொழும்பு, மார்ச். 04

மாகாண சபைத் தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கும், புதிய அரசமைப்பு உருவாக்கப்பணிகளை ஆரம்பிப்பதற்கும் உரிய அழுத்தங்களை வலுவாக பிரயோகிக்கவேண்டிய பொறுப்பு சகல தரப்பினருக்கும் உள்ளது என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக்கூட்டணியின் ஊடகப்பேச்சாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் வலியுறுத்தினார். இந்த விடயத்தில் தமிழ்த் தரப்புகள் ஒன்றிணைந்து பயணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்றும் அவர் கூறினார்.

தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியமும் லண்டன் மற்றும் இலங்கை தமிழ் இலக்கிய நிறுவனமும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த மறைந்த மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்தின் ஓராண்டு நினைவஞ்சலிக் கூட்டம் மற்றும் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருளை சேமித்து வைக்க ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை

## அரசாங்கத்திடம் சம்பிக்க கேள்வி

கொழும்பு, மார்ச். 04

அரசாங்கம் போதிய எரிபொருள் இருப்புகளை சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்று முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்கா கடந்த ஜனவரி மாதத்திலேயே தனது பாரிய போர்க்கப்பல்களை ஈரான் எல்லைக்கு அருகிலுள்ள கடற்பரப்புக்கு கொண்டு சென்றது. கோடிக்கணக்கான டொலர்களை செலவிட்டு அமைதியாக இருப்பதற்காகவா அந்தப் போர்க்கப்பல்கள் அங்கு கொண்டு செல்லப்பட்டன? அமெரிக்காவின் இந்த முன்னெடுப்புகள் குறித்து அரசாங்கத்துக்கு விழிப்புணர்வு ஏற்படவில்லையா என்றும் சம்பிக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டின் பல பகுதிகளில் தற்போது எரிபொருள் நிரப்பு நிலையங்களில் நீண்ட வரிசைகள் காணப்படுகின்றன. மத்திய கிழக்கு மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றம் காரணமாக எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சத்திலேயே மக்கள் இவ்வாறு வரிசைகளில் காத்திருக்கின்றனர். சாதாரண பொதுமக்களுக்கு இருக்கும் இந்த விழிப்புணர்வும் அச்சமும் அரசாங்கத்திடம் ஏன் இல்லை?

உலகளாவிய ரீதியில் இவ்வாறான போர் அபாயங்கள் தெரிந்திருந்தும், அதற்கு முகங்கொடுக்க அரசாங்கம் போதிய எரிபொருள் இருப்புகளை சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கவில்லை."- என்றார். (எ)

# கூரிய ஆயுதத்தால் தாக்கி பெண் தாதி படுகொலை!

## சந்தேகநபர் பொலிஸாரால் கைது

கேகாலை, மார்ச். 04

கேகாலை - அரநாயக்க பகுதியில் நேற்றுக்காலை பெண் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அரநாயக்க மருத்துவமனையில் கடமையாற்றிய 35 வயது தாதி ஒருவரே இவ்வாறு படுகொலை செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் கைது செய்யப்பட்டதுடன், தாக்குலுக்குப் பயன்படுத்தப்பட்ட ஆயுதமும் கைப்பற்றப்பட்டது.

குறித்த பெண், கணவனை பிரிந்து தனியாக வசித்துவந்த நிலையில், வேறொரு நபருடன் தகாத உறவில் இருந்ததாகவும், பின்னர் இவருக்கும் இடையே ஏற்பட்ட தகராறு காரணமாக இந்தக் கொலை இடம்பெற்றதாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (எ)

# குஷ் போதைப்பொருளுடன் 27 வயது இளைஞன் கைது!

கொழும்பு, மார்ச். 04

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலைய வருகை முனையத்தில் குஷ் ரக போதைப்பொருளுடன் இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனையின் போதே இந்தக் கைது நடவடிக்கை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, சந்தேகநபரிடமிருந்து, ஒரு கிலோ 154 கிராம் குஷ் ரக போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் வெயாங்கொடை பகுதியைச் சேர்ந்த 27 வயது இளைஞன் என அடையாளம் காணப்பட்டுள்ளார். (எ)

# மின்னேரியாவில் பஸ் விபத்து: பத்து பேர் மருத்துவமனையில்

ஹபரணை, மார்ச். 04

ஹபரணை - பொலநறுவை வீதியின் மின்னேரியா பகுதியில் நேற்றுக்காலை பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் பத்து பேர் காயமடைந்தனர்.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று, மற்றுமொரு பஸ் மற்றும் டிராக்டர் ரக வாகனம் ஒன்றுடன் மோதியதில் இந்த விபத்து நேர்ந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில், பஸ்ஸில் பயணித்த 07 பேர் உட்பட மொத்தம் 10 பேர் காயமடைந்து ஹபரணை மற்றும் பொலநறுவை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்களில் ஒருவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளதோடு, அவர் மேலதிக சிகிச்சைகளுக்காக தம்புள்ளை மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் ஆணின் சடலம் மீட்பு!

பாணந்துறை, மார்ச். 04

பாணந்துறை - கொழும்பு பழைய வீதியில் கை மற்றும் கால்கள் கட்டப்பட்ட நிலையில் நபர் ஒருவரின் சடலம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை மீட்கப்பட்டது என்று பாணந்துறை தெற்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் பாணந்துறை வடக்கு, ஞானசேன மாவத்தையை சேர்ந்த 37 வயது நபர் ஒருவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்றுக் காலை வீதியோரமாக நபர் ஒருவர் கிடப்பதைக் கண்ட பொதுமக்கள் வழங்கிய தகவலின் பேரில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு விரைந்தனர்.

இதன்போது, உயிரிழந்தவரின் கைகளும் கால்களும் கயிற்றினால் பலமாக கட்டப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டது. இது ஒரு திட்டமிட்ட படுகொலை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கொலையாளிகளைக் கண்டறியும் நோக்கில் பாணந்துறை தெற்கு பொலிஸார் விசேட விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

நாடளாவிய ரீதியில்

# பொலிஸ் சுற்றிவளைப்பில் ஒரே நாளில் 630 பேர் கைது

கொழும்பு, மார்ச். 04

பொலிஸ் மா அதிபரின் அறிவுறுத்தலுக்கமைய, நாடளாவிய ரீதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின்போது, 630 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

அத்துடன் 31, 076 பேர் சோதனைக்கு உட்படுத்தப்பட்டதுடன், 09 பேர் குற்றங்களுடன் தொடர்புடைய மற்றும் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேநேரம், கைது செய்ய பிறப்பிக்கப்பட்ட பிடியாணைகளுக்கமைய 248 பேரும், திறந்த பிடியாணைகளுக்கமைய 157 பேரும் கைது செய்யப்பட்டனர்.

இதேவேளை, மதுபோதையில் வாகனம் செலுத்திய 159 பேரும், கவனக்குறைவாக வாகனம் செலுத்திய 39 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன், பிற போக்குவரத்து குற்றங்களுக்காக 3,677 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

# மகாவலி கங்கையில் நீரில் மூழ்கி சிறுவன் பலி!

கொழும்பு, மார்ச். 04

கம்பளை - இல்லவதுர பகுதியில், மகாவலி கங்கையில் நீராடச் சென்ற சிறுவன் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை இந்தச் சம்பவம் பதிவானது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்தவர் கம்பளைப் பகுதியைச் சேர்ந்த 14 வயது சிறுவன் என்று அடையாளம் காணப்பட்டார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (எ)

எச்சரிக்கை!
உங்கள் வீட்டில் சட்டவிரோத இந்தியன் DTH (DishTV) இருக்கிறதா?
SUN DIRECT TATA sky dishtv VIDEOCON d2h Digital DTH Service
இவற்றை விற்பனை செய்வதும், பயன்படுத்துவதும் இரண்டுமே சட்டவிரோதம்!
அவசியமற்ற சட்டப்பிரச்சனைகளை தவிர்க்க, இன்று எமது சட்டபூர்வ கேபிள் டிவி இணைப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!
It has come to our notice that illegal DTH (Dish TV) service providers are advertising unverified services through social media platforms. While we have initiated measures to stop such illegal operations, TRC would like to notify all consumers to be cautioned of obtaining services from such illegal vendors or making any type of payments. You may refer http://www.trc.gov.lk/direct-to-home-satellite-broadcasting-operators.html for information on authorized DTH operators before subscribing for such services.
TRC Telecommunications Regulatory Commission of Sri Lanka
155 சனல்கள் 1420/- ரூபா (அனைத்துவரிகளும் சேர்த்து)
புதிய இணைப்புக்கு 10,000/- ரூபா மட்டுமே!
தொடர்புக்கு 0707 888 999 நிபந்தனைக்கு உட்பட்டது.
Ask CABLE VISION
உங்கள் நம்பிக்கைக்குரிய கேபிள் டிவி சேவை!
நம்பகமான சேவை | தெளிவான படம் மற்றும் ஒலி | சட்டபூர்வ பாதுகாப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழர்களின் பூர்வீக கிராமத்தை முஸ்லிம்கள் அபகரிக்க முயற்சி!"

மட்டக்களப்பு, மார்ச். 04

தனித் தமிழ் மக்கள் வாழும் வாழைச்சேனை கொண்டையங்கேணி கிராமம் இன்று கொண்டையன்கேணி முஸ்லிம் கிராமம் என்று மாற்றப்பட்டுள்து. இவ்வாறு தமிழர்களுடைய பூர்வீக கிராமங்களின் பெயர்களை தங்களுடைய கிராமங்கள் என்று தெரிவித்து எதிர்காலத்தில் இந்த கிராமத்தில் முஸ்லிம்கள் வாழ்ந்தார்கள் என அபகரிப்பதற்காக செயல்படுகின்றனர். இதனை வன்மையாக கண்டிப்பதாக கிழக்கு தமிழர் கூட்டமைப்பின் கோறளைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் தனபாலசிங்கம் நிர்மலன் தெரிவித்தார்.

மட்டு. வாழைச்சேனை கிண்ணியடியில் உள்ள அவரது காரியாலயத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், "கடந்த 26ஆம் திகதி நடைபெற்ற சபை அமர்வில் வாழைச்சேனை பிரதேச சபையின் வருமானத்தை அதிகரிப்பதற்காக வட்டார எல்லைகளின் எல்லை நிர்ணயத்தை அடையாளப்படுத்தும் பிரேரணை ஒன்று தவிசாளரால் கொண்டுவரப்பட்டு தீர்மானம் எடுக்கப்பட்டது.

தீர்க்கப்படாத ஒரு பிரச்னைக்கு முழுமையான தீர்வு காணப்படாமல் இந்த எல்லை நிர்ணயங்களை தங்களுக்கு தாங்களே தீர்க்கமாக தீர்மானித்து ஒரு வருமானத்தை நோக்கமாகக் கொண்டு எமது சமூகத்தின் எல்லையை பின்னுக்குத் தள்ளுகின்ற செயல்பாட்டை செய்யக்கூடாது என வலியுறுத்தினேன். ஆனால், அவர்கள் அதனை ஏற்றுக்கொள்வதாக இல்லை.

கோறளைப்பற்று பிரதேசத்தில் 14 வட்டாரங்கள். இதில் 4 முஸ்லிம் வட்டாரங்கள், 10 வட்டாரங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். இருந்தபோதும் 8 வட்டாரங்கள் முழுக்க முழுக்க தமிழர்கள் வாழ்கின்ற சூழல் இருக்கின்ற நிலையில் 2 வட்டாரங்கள் தமிழர்கள்- முஸ்லிம்கள் குடியேற்றப்பட்டு வாழ்ந்து வருகின்ற வட்டாரங்களாகும்.

இதில் எங்களுக்கான ஒரு எல்லை நிர்ணயம் வகுக்கப்படாமல் பிரதேச சபையால் அவர்களாகவே எல்லை நிர்ணயங்களை தயாரித்து அதில் வருமானங்களை அதிகரிக்க வேண்டும் என்பது எதிர்காலத்திலே தமிழ்க் கிராமங்கள் சுருங்கிப் போகக்கூடிய அளவுக்கு ஆதாரங்களாக அமைந்துவிடும்."- என்றார். (எ)

# நுவரெலியாவில் நேற்றும் கடும் உறைபனிப்பொழிவு



நுவரெலியா, மார்ச். 04

நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலில் நேற்றும் கடும் உறைபனிப்பொழிவு காணப்பட்டது. கடந்த சில தினங்களாகவே நுவரெலியாவில் இவ்வாறான உறைபனி நிலைமை நிலவி வரும் நிலையில், நேற்றும் அதன் தாக்கம் தொடர்ந்தது.

குறிப்பாக, மாலை நேரங்களில் நிலவும் அதிகப்படியான குளிரைத் தொடர்ந்து, அதிகாலை வேளைகளில் புற்களின் மேல் உறைபனி அல்லது 'உப்புப் பனி' படர்ந்து காட்சியளிக்கிறது.

கடந்த காலங்களில் இத்தகைய உறைபனி நிலைமை அரிதாகவே காணப்பட்ட போதிலும், தற்போது இது தொடர்ச்சியாக நிலவி வருகின்றது. (எ)

# போதைப்பொருட்களுடன் பெண்கள் இருவர் கைது!

கொழும்பு, மார்ச். 04

வெலிவேரியா மற்றும் கொழும்பு 12 ஆகிய பகுதிகளில் நேற்றுக்காலை மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனைகளின் போது, ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருட்களுடன் இரண்டு பெண்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

வெலிவேரியா, எம்பரலுவ வடக்கு பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சோதனையின் போதே 25 கிராம் ஹெரோயினுடன் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இந்தப் பெண்ணிடம் முன்னெடுக்கப்பட்ட விரிவான விசாரணைகளை அடுத்து, மற்றுமொரு பெண் கைது செய்யப்பட்டார்.

60 வயதுடைய அந்தப் பெண்ணிடமிருந்து 25 கிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் போதைப்பொருள் வியாபாரத்தின் மூலம் ஈட்டப்பட்டதாக சந்தேகிக்கப்படும் 4 இலட்சத்து 10, 470 ரூபாய் பணத்தொகை என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. (எ)

# சுற்றுலா பயணிகள் வருகை நுவரெலியாவில் அதிகரிப்பு

நுவரெலியா, மார்ச். 04

நீண்ட வார இறுதி விடுமுறையை முன்னிட்டு பெருமளவிலான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தந்துள்ளனர் என்று நுவரெலியா சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் சேவை வழங்குநர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நுவரெலியாவுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகள் அங்குள்ள அனைத்து ஹோட்டல்கள் மற்றும் விடுமுறை விடுதிகளின் அறைகளை முன்பதிவு செய்துள்ளனர் என்று சங்கத்தின் தலைவர் மகிந்த தொடங்கப்பகமகே தெரிவித்தார்.

வருகை தந்துள்ள சுற்றுலாப் பயணிகள் கிரிகரி வாவி வளாகம் உள்ளிட்ட நுவரெலியாவின் பிரதான சுற்றுலாத் தலங்களைப் பார்வையிடுவதில் ஆர்வம் காட்டி வருவதாகவும் கூறினார்.

பொருளாதார ரீதியாக நுவரெலியா பகுதிக்கு இந்த விடுமுறைக்காலம் ஒரு சிறந்த வருமானத்தை ஈட்டித் தந்துள்ளதாகவும் ஹோட்டல் உரிமையாளர்கள் மகிழ்ச்சி வெளியிட்டுள்ளனர். (எ)

# வனப்பகுதிகளில் திடீரென தீ விபத்து



நுவரெலியா, மார்ச். 04

மஸ்கெலியாவில் உள்ள கிளேன்டில் தோட்டத்தில் உள்ள ஒரு வனப்பகுதியிலும், சிவனொளிபாதமலை வனப்பகுதியின் மலைத்தொடரிலும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை இரவு திடீரென தீ விபத்து ஏற்பட்டது. கடுமையான வறண்ட வானிலை மற்றும் அந்தப் பகுதியைப் பாதிக்கும் காற்று காரணமாக, தீ சுற்றியுள்ள பகுதிகளுக்கு வேகமாக பரவி வருகிறது.

இந்த நாட்களில் தோட்டத்தின் பல இடங்களில் இதுபோன்ற தீ விபத்துகள் அதிக அளவில் பதிவாகி வருவதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். இந்தச் சூழ்நிலை காரணமாக, பல உணர்திறன் வாய்ந்த சுற்றுச்சூழல் மண்டலங்கள் அழிக்கப்பட்டு வருகின்றன. மேலும், இப்பகுதியில் உள்ள நீர் ஆதாரங்கள் வறண்டு போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது. மத்திய மலைநாட்டில் உள்ள நீர்ப்பிடிப்புப் பகுதிகள் தீயில் சிக்கிக் கொள்வது எதிர்காலத்தில் கடுமையான நீர் பற்றாக்குறைக்கு வழிவகுக்கும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

# மத்திய கிழக்கு போர்ச் சூழலால் நேற்று 57 விமான சேவைகள் ரத்து

கொழும்பு, மார்ச். 04

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாக, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து மத்திய கிழக்கு நாடுகளுக்குப் பயணிக்கவிருந்த 57 விமான சேவைகள் நேற்றை தினமும் இரத்து செய்யப்பட்டன.

இதன்படி, நாட்டிலிருந்து வெளியேறவிருந்த 28 விமானப் பயணங்களும், நாட்டுக்கு வருகை தரவிருந்த 29 விமானப் பயணங்களும் இரத்து செய்யப்பட்டன.

மத்திய கிழக்கிற்குச் செல்லும் மற்றும் அங்கிருந்து வரும் விமானங்கள், அதேபோன்று அந்தப் பிராந்தியத்தின் ஊடாக ஏனைய இடங்களுக்குப் பயணிக்கும் விமானங்கள் தொடர்ந்தும் தற்காலிகமாக இரத்து செய்யப்பட்டுள்ளன என்று இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபை அறிவித்துள்ளது. (எ)

# ரூ. 183 மில்லியன் செலவில் சிறுவர் பராமரிப்பு இல்லம்

## ஆளுநர் அடிக்கல் நாட்டினார்

கண்டி, மார்ச். 04

கண்டி, பூஜாப்பிட்டிய பிரதேசத்தில் சிறுவர் பராமரிப்பு இல்லம் ஒன்றை 183 மில்லியன் ரூபாய் செலவில் அமைப்பதற்கு மத்திய மாகாண ஆளுநர் சரத் அபேகோன் நேற்று முன்தினம் அடிக்கல் நாட்டி வைத்தார்.

மத்திய மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தை, சிறுவர் பராமரிப்பு திணைக்களத்தால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

இப்பிரதேசத்தில் மூடப்பட்ட ஒரு பாடசாலையே இதற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இது பெப்புல்வத்த என்ற இடத்தில் அமைந்துள்ளது. புதிதாக இருமாடிக்கட்டடம் மற்றும் சுற்று மதில்கள் என்பன அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் மத்திய மாகாண ஆளுநர் பேராசிரியர் சரத் அபேகோன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார். (எ)

# மருத்துவமனை முன்பு ஆர்ப்பாட்டம்




நுவரெலியா, மார்ச். 04

டிக்கோயா கிழங்கன் ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலத்துக்கு பாலியல் வன்புணர்வு மேற்கொள்ளப்பட்டதாக கூறி டிக்கோயா கிழங்கன் ஆதார மருத்துவமனைக்கு முன்பாக நேற்று செவ்வாய்க்கிழமை காலை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 25ஆம் திகதி ஹற்றன் ஏபோட்ஸ்சிலி தோட்டப் பகுதியில் 23 வயது பெண் ஒருவர் உயிரிழந்த நிலையில் அவரின் சடலம் டிக்கோயா கிழங்கன் ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் ஒப்படைக்கப்பட்டது. அந்த பெண்ணின் சடலத்துக்கு மருத்துவமனையில் பணிபுரிந்து வரும் மூன்று சிற்றூழியர்கள் பாலியல் வன்புணர்வு மேற்கொண்டதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் குற்றம்சாட்டினர். (எ)

# திருகோணமலை நகரில் சித்திர கலைக்கூட மாணவர்களின் வெளிப்புற ஓவியப் பயிற்சி

திருகோணமலை, மார்ச். 04

திருகோணமலை நகரின் வரலாற்றுச் சிறப்புமிக்க கோட்டைப் பகுதியை அண்மித்த இடத்தில் ASP சித்திரக் கலைக்கூடத்தில் கற்கும் மாணவர்கள் நேற்று முன்தினம் திங்கட்கிழமை வெளிப்புற சித்திரப் பயிற்சியில் ஈடுபட்டனர்.

இப்பயிற்சியில் 35இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டதுடன், கலைக்கூடத்தின் ஆசிரியர் சுதர்சன் வழிநடத்தலில் நிலக்காட்சி ஓவியங்களை வரைந்து நடைமுறை அனுபவத்தை பெற்றனர்.

கோட்டைப் பகுதியைச் சூழவுள்ள இயற்கைக் காட்சிகள், கடற்கரை பின்னணி, வரலாற்று கட்டட அமைப்புகள் ஆகியவற்றை கவனித்து அவற்றை ஓவிய வடிவில் பதிவு செய்யும் பயிற்சியே இந்த நிகழ்வின் நோக்கமாக இருந்தது.

மாணவர்கள் தங்களின் கலைத்திறனை மேம்படுத்துவதோடு, நேரடியாக இயற்கையை கவனித்து வரையும் திறனையும் வளர்த்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெற்றனர்.

ஆசிரியர் சுதர்சன், வெளிப்புற சூழலில் நடைபெறும் இத்தகைய பயிற்சிகள் மாணவர்களின் பார்வைத்திறன், நிறங்களின் உணர்வு, ஒளி-நிழல் புரிதல் ஆகியவற்றை மேம்படுத்த உதவுகின்றன என தெரிவித்தார்.

மேலும், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை கலைப்படைப்புகளின் மூலம் பதிவு செய்வது மாணவர்களுக்கு சிறப்பான அனுபவமாக அமைகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்திய கிழக்கு மோதல்...

செய்வதற்கான ஏற்பாடுகள் பற்றிச் சபைக்கு விளக்கினார்.

“இலங்கையில் அடுத்த 33 நாட்களுக்கு போதுமான டீசல், அடுத்த 27 நாட்களுக்குத் தேவையான பெற்றோல் ஆகியன கையிருப்பில் உள்ளன.

மார்ச் 07 அல்லது 08 ஆம் திகதிகளில் 35 ஆயிரம் தொன் பெற்றோலுடன் ஒரு எண்ணெய் தாங்கிக் கப்பல் இலங்கைக்கு வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சேமிப்பு, இருப்பு மற்றும் தற்போதுள்ள எரிபொருள் இருப்பு ஆகியவற்றின் அடிப்படையில் கப்பல்கள் கொண்டுவரப்படுகின்றன.

ஆர்.எம். பார்க் இலிருந்து எரிபொருள் ஏற்றிய கப்பல் ஒன்று மார்ச் 14 ஆம் திகதியும், சினோபெக்கிலிருந்து மார்ச் 14 ஆம் திகதியும், இந்திய எண்ணெய் நிறுவனத்தில் (ஐ.ஓ.சி) இருந்து மார்ச் 21 ஆம் திகதியும், சிலோன் பெட்ரோலிய நிறுவனத்தில் இருந்து மார்ச் 28 ஆம் திகதியும் எரிபொருள் நிரப்பிய கப்பல்கள் வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அனைத்து கப்பல்களிலும் எரி பொருள் ஏற்றப்பட்டுள்ளது, மேலும் வழங்கல் மற்றும் சேமிப்புக்கான உறுதிப்படுத்தலும் செய்யப்பட்டுள்ளது” என்று அவர் கூறினார்.

மேலும், மத்திய கிழக்கு நெருக்கடியால் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்த அறிக்கையைத் தயாரிக்கும் பணியில் இலங்கை மத்திய வங்கி ஈடுபட்டு வருவதாகவும், நிதி மற்றும் வெளியுறவு அமைச்சுகள் ஏற்கனவே நிலைமையைக் கண்காணித்து, அறிக்கைகளைத் தொகுத்து, பாதிப்பை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகளைச் செயல்படுத்தியுள்ளன என்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மேலும் கூறினார். (அ-ஒ)

## பிரதம...

நீதவான் நீதிமன்றத்திற்கு சென்றார்.

இதன்போது மன்னார் மேல் நீதிமன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, மன்னார் மாவட்ட நீதவான் ஐ.என். றிஸ்வான், மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் எம். எம்.எப்.ஸிஹாரா மற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்து பிரதம நீதியரசரை வரவேற்றனர். அதனைத்தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்ற கட்டடத்தில் பிரதம நீதியரசர் தலைமையில் கலந்துரை யாடல் இடம்பெற்றது.

இதன்போது நீதிமன்ற செயல்பாடுகள் உள்ளடங்கலாக பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. (அ)

## பயங்கரவாத...

(பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா) சார்பில் விசேட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டது.

இதனை பிரித்தானியாவின் மனித உரிமைகள் தூதுவர் எலினோர் சாண்டர்ஸ் முன்வைத்தார்.

புதிதாக முன்மொழியப்பட்டுள்ள “பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாப்புச் சட்டம்“ முந்தைய சட்டத்தை விடவும் பாரிய கவலைகளைத் தோற்றுவிப்பதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைப் பொறுப்புகளுக்கு இணங்க இருக்கவேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

அதேநேரம், இராணுவத்தின் வசமுள்ள காணிகள் சில விடுவிக்கப்பட்டுள்ளபோதிலும், அந்தச் செயல் முறை மிகவும் மந்த கதியில் உள்ளதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. கடந்த கால மோதல்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்குப் பல்வேறு பின்னணிகளைக் கொண்ட சமூகங்களுக்கு அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளமையை வரவேற்ற தூதுவர், இது நல்லிணக்கத்திற்கு மிக அவசியம் எனத் குறிப்பிட்டார்.

நிலைமாறுகால நீதி, இனவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் முக்கியமான மனித உரிமை மீறல் வழக்குகள் குறித்து ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிகளை முக்கிய குழு கவனத்தில் கொண்டுள்ளது.

இருப்பினும், களத்தில் அதன் முடிவுகள் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்வதாகவும், முக்கிய நிறுவனங்கள் இன்னும் பலவீனமாகவே இருப்பதாகவும் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வலுவான மற்றும் சுயாதீனமான உள்நாட்டு நிறுவனங்கள் அவசியம் எனச் சுட்டிக்காட்டிய தூதுவர், திட்டமிடப்பட்டுள்ள சுயாதீன அரச வழக்குதொடுநர் அலுவலகம் வெறும் பேச்சளவில் இன்றிச் செயல்பாட்டுக்கு வரவேண்டும் என வலியுறுத்தினார்.

இறுதியாக, மோதல் காலங்களில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையை ஏற்றுக்கொண்ட முக்கிய குழு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதை உறுதி செய்ய இலங்கை அரசாங்கம் ஆக்கபூர்வமாக செயல்பட வேண்டும் எனக் கேட்டுக்கொண்டன. (அ)

# சர்வதேச சமையற்கலை போட்டியில் ஈழத் தமிழரான தனுராஜ் சாதனை

யாழ்ப்பாணம், மார்ச் 04

சர்வதேச ரீதியில் இடம்பெற்ற, சமையற்கலை மற்றும் காய்கறி செதுக்கல் போட்டிகளில், ஈழத்தமிழரான தனுராஜ் ரவிராஜ் சாதனை படைத்துள்ளார்.

அண்மையில் கிறீஸ் நாட்டில் இடம்பெற்ற, மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான காய்கறி மற்றும் பழங்கள் செதுக்கல் சம்பியன்ஷிப் போட்டியில், இத்தாலி நாட்டின் சார்பில் பங்கேற்ற ஈழத்தமிழர், வெள்ளிப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அத்துடன், சமையற்கலைத் துறையில் வழங்கப்படும் உயரிய கௌரவமான, “கிரீஸ் குலினரி” விருதையும் தட்டிச் சென்றுள்ளார்.

சேர்பியா நாட்டைச் சேர்ந்த சர்வதேசச் சமையற்கலை ஒன்றியத்தின் உறுப்பினர் டேனியேலா பான்டிக் விலாஹோவிக்கிடம் இருந்து, “சிறந்த ஆளுமைக்கான அங்கீகாரத்தையும்” தனுராஜ் பெற்றுக்கொண்டார்.

15 நாடுகளைச் சேர்ந்த போட்டியாளர்கள் பங்குபற்றிய இப்போட்டியில், உலகத்தரம் வாய்ந்த நடுவர் குழாமினால், தனுராஜின் திறமை மதிப்பீடு செய்யப்பட்டு, வெள்ளிப் பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார். (அ)

## ஈரான் மீது...

நடத்திய தாக்குதலையும் கண்டிக்கின்றோம் எனவும் எதிர்க்கட்சி தலைவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் சூழ்நிலையால் எமது நாட்டுக்கு ஏற்படும் தாக்கங்கள் மற்றும் பிரச்னைகள் தொடர்பில் விசேட கலந்துரையாடல் அவசியம்.

இதற்கான அழைப்பை ஜனாதிபதி விடுக்கவேண்டும். கட்சி பேதம் இன்றி அனைவரும் பங்கேற்கவேண்டும் எனவும் சஜித் பிரேமதாஸ மேலும் கூறினார். (அ)

## பரிசுத்த...

திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க, நேற்று முன் தினம் வத்திகானில் வைத்து இதற்கான அழைப்பிதழைப் ஒப்படைத்ததாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வத்திகானின் நாடுகளுடனான உறவுகளுக்கான பிரதிச் செயலாளர் அருட்தந்தை மிஹைடா பிளாஜிடம் இந்த உத்தியோகபூர்வ ஆவணம் கையளிக்கப்பட்டது.

திருத்தந்தையின் இந்த வருகையானது இரு நாடுகளுக்கும் இடையிலான இராஜதந்திர மற்றும் மத ரீதியான உறவுகளை மேலும் பலப்படுத்தும் என எதிர்பார்க்கப் படுகிறது. (அ)

## மக்கள்...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த ஒன்றரை வருடங்களாக நாட்டில் வரிசைகள் உருவாவதைக் காணச் சிலர் ஆவலுடன் காத்திருந்தனர். பொருளாதார மாற்றங்கள் இன்றி தங்களால் ஆட்சியைக் கைப்பற்ற முடியாது என்பதை எதிர்க்கட்சியினர் உணர்ந்துள்ளனர்.

ஊழலற்ற ஆட்சி அல்லது சிறந்த நிர்வாகக் கட்டமைப்புகள் குறித்துப் பேசுவதற்கு எதிர்க்கட்சியினரிடம் எவ்விதத் திட்டமும் இல்லை. இதனால், செயற்கையான நெருக்கடிகளை உருவாக்குவதன் மூலமே அவர்கள் அரசியல் செய்ய முற்படுகின்றனர்.

சில ஊடக நிறுவனங்கள் இத்தகைய வரிசைகளில் நிற்கும் மக்களின் கருத்துக்களைப் பெற்று, நிலைமையை மோசமாகக் காட்ட முயற்சிக்கிறது. ஆனால் இத்தகைய அரசியல் சூழ்ச்சிகள் பலனளிக்காது என்பதை ஜனாதிபதி தெளிவாகக் காட்டியுள்ளார்-என்றார். (அ)

## சீரான...

நெருக்கடி ஏற்படாமல் அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் எரிபொருளை வழங்குவதை உறுதி செய்யும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. எனவே தேவையற்ற முறையில் எரிபொருளை சேமித்து வைப்பதையும், வரிசையில் காத்திருப்பதை தவிர்க்கு மாறு மக்களை கேட்டுக்கொண்டார்.

மேலும், இந்தியா, சிங்கப்பூர், மலேசியா மற்றும் தென் கொரியாவில் இருந்து எரிபொருளை ஏற்றிவரும் கப்பல்கள் திட்டமிட்ட திகதியில் நாட்டை வந்தடையும் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் வலியுறுத்தினார். ஹார்முஸ் நீரிணை மூடப்படுவதால் நாட்டின் எரி பொருள் மற்றும் மசகு எண்ணெய் விநியோகத்தில் எவ்வித தாக்கத்தையும் ஏற்படுத்தாது என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## நிறைவேற்று...

இலங்கையர்கள் நம்புவதாகவும் இந்த ஆய்வு சுட்டிக் காட்டுகிறது.

பொதுமக்களின் அரசியலமைப்பு அறிவைப் பொறுத்தமட்டில், 54 வீதத்தினர் அது குறித்து சராசரி அறிவைக் கொண்டுள்ளதோடு, 18.2 வீத மக்களுக்கு அரசியலமைப்பு சார்ந்து எவ்வித அறிவும் இல்லை என்பதும் இந்த ஆய்வின் மூலம் வெளிச்சத்திற்கு வந்துள்ளது. (அ)

## மத்திய கிழக்கு போர்...

மத்திய கிழக்கில் தற்போது தீவிரமடைந்து வரும் போர் நிலைமை காரணமாக, இலங்கையின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதித்துறைகளில் ஏற்படக்கூடிய சவால்கள் குறித்து இதன்போது விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக, ஈரானை மையப்படுத்திய வர்த்தக நடவடிக்கைகள் பாதிக்கப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து இதன்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. அதேவேளை, மத்திய கிழக்கு நாடுகளில் பணிபுரிந்து வரும் சுமார் பத்து இலட்சத்திற்கும் அதிகமான இலங்கையர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களின் தொழில் சார் எதிர்காலம் தொடர்பிலும் இந்தச் சந்திப்பில் ஆலோசிக்கப்பட்டது.

அவர்களின் உயிர் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும், வாழ்வாதாரத்தைப் பாதுகாப்பதற்கும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்த வேண்டுமென இதன்போது வலியுறுத்தப்பட்டது. இது தொடர்பான மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அரசாங்கத்தைக் கோருவதற்கும் இக்கலந்துரையாடலில் தீர்மானிக்கப் பட்டது. (அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# சர்வதேச சட்ட மீறல்கள் குறித்து இலங்கை தனது நிலைப்பாட்டை வெளியிடவேண்டும்



## ஈரானியத் தூதுவர் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 04

மத்திய கிழக்கில் தீவிரமடைந்து வரும் போர்ச் சூழலில், சர்வதேச சட்ட மீறல்கள் குறித்து இலங்கை தனது நிலைப்பாட்டைத் தெளிவாக வெளிப்படுத்தவேண்டும் என ஈரான் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் இலங்கைக்கான ஈரானிய தூதுவர் அலிரேசா டெல்கோஷ் இதனை தெரிவித்துள்ளார்.

இலங்கையின் நீண்ட கால அணிசேரா வெளியுறவுக் கொள்கை என்பது, பொதுமக்களின் உயிரிழப்புகள் மற்றும் சர்வதேச விதி மீறல்களின்போது மௌனமாக இருப்பதைக் குறிக்காது எனவும் அவர் குறிப்பிட்டார்.

"இலங்கை ஒரு நடுநிலையான நாடு என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால், நடுநிலைமை என்பது மௌனம் காப்பது என்று அர்த்தமல்ல" எனக் குறிப்பிட்ட அவர், பிஞ்சு குழந்தைகள் கொல்லப்படும்போது ஒரு நாடு அமைதியாக இருக்கக்கூடாது என்றும் வலியுறுத்தினார்.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள், ஈரானின் பொது மக்களின் தனிப்பட்ட சொத்துகள் மற்றும் உட்கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்துவதாகக் குற்றம் சாட்டிய தூதுவர், போரிடும் தரப்புகளுக்கு இடையே அணிசேராமல் இருப்பதே நடுநிலைமை என்றும், ஆனால் சர்வதேச சட்டங்கள் மீறப்படும்போது அதற்கு அலட்சியமாக இருக்கக்கூடாது என்றும் சுட்டிக்காட்டினார். (அ)

# "இலங்கை மருத்துவச் சேவை" அமைப்பை உருவாக்குங்கள்!

## அரசிடம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 04

இலங்கையின் சுகாதாரத்துறையில் நிலவும் நீண்டகால நெருக்கடிகளுக்குத் தீர்வாக "இலங்கை மருத்துவச் சேவை" என்ற தனித்துவமான சேவைப் பிரிவை உடனடியாக நிறுவுமாறு அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

பொதுச்சுகாதாரச் சேவையை வலுப்படுத்துவது அரசாங்கத்தின் பொறுப்பு என்ற போதிலும், தற்போதைய நிர்வாகம் அந்தப் பொறுப்பிலிருந்து வேண்டுமென்றே நழுவி வருவதாகச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மருத்துவர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவது தொடர்பாக எட்டப்பட்ட எழுத்துபூர்வ உடன்படிக்கைகளை அரசாங்கம் மீறியுள்ளதால், தொழிற்சங்கப் போராட்டங்களைத் தீவிரப்படுத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகச் சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# மத்திய கிழக்கு போர்ச்சூழல் இலங்கைக்கு பெரும் பாதிப்பு!

## ஜனாதிபதிக்கு ஜி.எல். பீரிஸ் கடிதம்



கொழும்பு, மார்ச் 04

மத்திய கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கை எதிர்கொள்ளவேண்டியுள்ள கடுமையான பொருளாதார மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து, முன்னாள் அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஜனாதிபதிக்கு நேற்று அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

அரசாங்கம் தனது நிலைப்பாட்டை உடனடியாக தெளிவுபடுத்தவேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், சுட்டிக்காட்டியுள்ள நான்கு முக்கிய பாதிப்புகள் வருமாறு:


உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பால், இலங்கையில் எரிபொருள் விலை உயரும் அபாயம் உள்ளது. இது ஏற்கனவே பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிக்கும்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான சந்தை வாய்ப்புகள் பாதிக்கப்படும். இதனால் குறிப்பாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

வான்வழிப் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் தமது இலங்கைக்கான பயணங்களை இரத்து செய்து வருகின்றனர். இது ஹோட்டல் துறையை கடுமையாகப் பாதித்துள்ளது.

வளைகுடா நாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் தடைப்படும் சூழல் உருவாகியுள்ளது. இது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். (அ)

# நோர்வே துணை அமைச்சருடன் சுமந்திரன், சாணக்கியன் சந்திப்பு



கொழும்பு, மார்ச் 04


நோர்வே துணை வெளிவிவகார அமைச்சர் ஆண்ட்ரியாஸ் கிராவிக்கை, தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் இ.சாணக்கியன் ஆகியோர் சந்தித்துள்ளனர்.

இச்சந்திப்பில், நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை, வடக்கு - கிழக்கு பகுதிகளின் நிலவரம், மக்களின் வாழ்வாதார சவால்கள், ஜனநாயக செயல்முறைகள், மற்றும் நீடித்த அரசியல் தீர்வின் அவசியம் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக, போருக்குப் பிந்தைய காலகட்டத்தில் நீடித்து வரும் அரசின் பொறுப்புணர்வு தொடர்பான கேள்விகள், நீதியை நிலைநிறுத்தும் செயல்முறைகள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு நியாயம் கிடைப்பதை உறுதி செய்வது, மற்றும் உண்மையான நல்லிணக்கம் உருவாகவேண்டிய சூழல் குறித்து விரிவாக கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

அத்துடன், அரசியல் அதிகாரப் பகிர்வு, அரசியலமைப்பு சீர்திருத்தங்களின் அவசியம், மற்றும் தமிழர் மக்களின் நீண்ட நாள் அரசியல் உரிமைகளை மதிக்கும் வகையில் அர்த்தமுள்ள மற்றும் நிலையான தீர்வை உருவாக்குவதின் முக்கியத்துவமும் வலியுறுத்தப்பட்டது. (அ)

# யாழ்.குடாநாட்டை திறன்மிகு நகரமாக மாற்ற "பசுமை யாழ்ப்பாணம்" விசேட செயற்றிட்டம்!



யாழ்ப்பாணம், மார்ச் 04

யாழ்ப்பாணக் குடாநாட்டைப் பசுமையான மற்றும் காலநிலை மாற்றங்களை எதிர்கொள்ளும் திறன்மிக்க ஒரு நகரமாக மாற்றியமைக்கும் உயரிய நோக்கோடு, "இம்பக்ட்" அணியினரால் "பசுமை யாழ்ப்பாணம்" எனும் விசேட செயற்றிட்டமொன்று முன்மொழியப்பட்டுள்ளது.

இதன் மாதிரிச் செயற்றிட்டத்தை முன்னெடுப்பது தொடர்பான விசேட கலந்துரையாடல், வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை காலை இடம்பெற்றது.

இக்கலந்துரையாடலின்போது, இச்செயற்றிட்டம் தொடர்பில் இம்பக்ட் அணியினரால் ஆளுநருக்கு விரிவாக விளக்கமளிக்கப்பட்டது. இது வெறுமனே ஒரு மரநடுகைத் திட்டமாக மட்டுமன்றி, முழுமையானதொரு "காலநிலைத் தாங்குதிறன் இயக்கமாக" வடிவமைக்கப்பட்டுள்ளமை இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக 1,000 மரங்களை நடுகை செய்தல், நகர்ப்புறப் பகுதிகளில் ஒரு குறுங்காட்டை உருவாக்குதல், பாடசாலைகள் மற்றும் அரச, தனியார் நிறுவன வளாகங்களைச் சூழப் பசுமையாக்குதல், நகரத் தூய்மையைப் பேணுதல் மற்றும் 2 முதல் 3 சேதனப் பசளை அலகுகளை உருவாக்குதல் போன்ற முக்கிய செயன்முறைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

அத்துடன், இத்திட்டத்தின் நிலைப்பேறான தன்மையை உறுதி செய்யும் பொருட்டு, மரங்களைத் தத்தெடுக்கும் வேலைத்திட்டம், தொண்டர் வலையமைப்புகளை உருவாக்குதல் மற்றும் நிறுவனங்களுடனான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போன்ற நீண்டகாலச் செயன்முறைகளும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்குப் பல்வேறு பங்குதாரர்களின் பங்களிப்பு அவசியமென வலியுறுத்தப்பட்டது. அதற்கமைவாக, சம்பந்தப்பட்ட அனைத்துப் பங்குதாரர்களுடனான விசேட கலந்துரையாடலொன்றை ஒழுங்கு செய்து, முன்மாதிரிச் செயற்றிட்டத்திற்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இடங்கள் தொடர்பில் ஆராய்ந்து இறுதித் தீர்மானம் எடுப்பதற்கும் இக்கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

இவ்விசேட கலந்துரையாடலில் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர், யாழ். மாநகர சபையின் பிரதி மேயர், யாழ். மாநகர சபை ஆணையாளர் மற்றும் பொறியியலாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பீடாதிபதி, மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அதிகாரிகள், இலங்கை மின்சார சபையின் அதிகாரிகள் மற்றும் இம்பக்ட் அணியின் பிரதிநிதிகள் எனப் பலரும் பங்கேற்றனர். (அ)

# இலங்கையில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கு விசேட பாதுகாப்பு

கொழும்பு, மார்ச் 04

இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் தங்கியுள்ள இடங்களுக்கு விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, பொலிஸ் மாஅதிபரின் பணிப்புரைக்கு அமைய, அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் உரிய ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவிக்கின்றது.

மத்திய கிழக்கில் நிலவும் போர்ப் பதற்றங்களை கருத்தில் கொண்டு, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையிலுள்ள வெளிநாட்டுத் தூதரகங்களை இலக்கு வைத்து தாக்குதல்கள் மற்றும் போராட்டங்கள் ஏற்படக்கூடும் என்ற அச்ச நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த நிலையில் 24 மணித்தியால பாதுகாப்புச் சேவையை தற்போது வழங்குவதில் பொலிஸ்துறை சிக்கலை எதிர்நோக்கியுள்ளது. கொழும்பில் பாடசாலைகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் மாபெரும் வருடாந்த கிரிக்கெட் போட்டிகளுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் இந்த சிக்கல் நிலை உருவாகியுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.03.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.